# முசிறி வட்டார நாட்டுப்புற மக்களின் ஒப்பாரிப்பாடல்களில் வாழ்வியல் நெறிகள்

முனைவர் ம.விஜயகுமார், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, சீனிவாசன் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, பெரம்பலூர் *– 621212.*
பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவுப்பெற்றது.

**ஆய்வுச் சுருக்கம்:**

நாட்டார் பாடல்களில் ஒப்பாரி பெண்களின் மன உணர்வினை வெளிக்கொணர்கின்றன. நாட்டுப்புற மக்களின் வாழ்வியலில் ஒப்பாரி இசையுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. மனிதன் தான் வாழ்கின்ற காலங்களில் இயற்கையோடு இரண்டறக் கலந்த வாழ்க்கையினை வாழ்கிறான். அத்தகைய மனித இறப்பு நிகழ்வின் போது அவனுடைய நெருங்கிய உறவுடைய பெண்கள் அம்மனித வாழ்க்கையில் இடம் பெற்ற பல்வேறு நிகழ்வுகளையும் சொல்லி மார்பில் அடித்துக்கொண்டு அழுகின்றனர். பெற்றோர் உடன் பிறந்தவர்கள், நெருங்கிய உறவுடையோர்களுக்காக இறந்தப் பின் பெண்கள் ஒப்பாரி பாடுகின்றனர். அத்தகைய மனித சமுதாயத்தில் நீங்கா இடம் பெறும் ஒப்பாரி, மனிதனின் வாழ்வியல் முறைகளை பல படி நிலைகளில் எடுத்தியம்புகின்றன.

**கலைச்சொற்கள்:**

ஒப்பாரி, மனித இறப்பு, உடன் பிறந்தவர்கள், பெண்கள் ஒப்பாரி, மனிதனின் வாழ்வியல், மனித சமுதாயம்.

## முன்னுரை

இறந்தவர்களை நினைத்து அவர்கள் மீது வைத்துள்ள அன்பின் வெளிப்பாடாக ஒப்பாரி பாடுகின்றனர். மனித வாழ்வின் முதலாக தாலாட்டும், முடிவாக ஒப்பாரியும் இடம் பெறுகின்றது. இறப்பு நிகழ்வின் முதல் நாலும், எட்டாம் நாளும் ஒப்பாரிப் பாடல்களை பெண்கள் பாடுகின்றனர். நாட்டுப்புற மக்களின் நாகரீகம், கலாச்சாரம், நம்பிக்கைகள், பண்பாடு இவற்றோடு இரண்டறக் கலந்த ஒப்பாரிப் பாடலின் வாயிலாக மனித குலத்தின் வாழ்வியல் முக்கியத்துவம் குறித்து விரிவாகக் காணலாம்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR

**நாட்டார் பாடல்களில் ஒப்பாரி**

நாட்டுப்புற பாடல்கள் தாலாட்டில் தொடங்கி ஒப்பாரி வரைப் பாடப்படுகின்றன. நாட்டுப்புறப் பாடல்களை ‘**பாட்டிடைக் கலந்த பொருள் வாகிப் பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே**”1 **எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது**. ஒப்பாரி என்பதனை ஒப்பு+ஆரி எனப் பிரித்துக் கொள்ளலாம். தமிழில் ஒப்பாரியைப் புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு இழவுப்பாட்டு, அழுகைப்பாட்டு எனப் பல வகையாகக் கூறுவர். இறப்பு நிகழ்விற்கு வரும் பெண்கள் பலரும் ஒப்பாரி வைத்து தங்களது மனத்துயரைப் பகிர்ந்து கொள்வர். பெண்கள் மார்பில் கைகளால் அடித்துக் கொண்டு இறந்தவர்களை நினைத்து அவர்கள் மீது பாடப்படும் பாடல்களை ஒப்பாரி எனப்படும். **"உறவினர் பெண்கள் தத்தம் வீட்டில் நடந்த துயர நிகழ்சிசிகளை எண்ணி கண்ணீர் விடுகின்றனர். எனவே ஒப்பாரி தத்தம் மனக்குறையை தீர்க்க உதவும் கருவியாகவும் பயன்படுகிறது"**2 **என்கிறார் சரஸ்வதி.**

**கணவனை இழந்த மனைவி**

குடும்பத்தை பாதுகாக்க வேண்டிய கணவன் இறந்த நிலையில் மனைவி சமுதாயத்தில் பல இன்னல்களை சந்திக்கின்றாள். கணவனை இழந்த பெண்ணை விதவை, கம்னாட்டி, கைம்பெண், முண்டச்சி, தாலி அறுத்தவள் எனப் பல பெயர்களில் அழைக்கின்றனர். விதவை சுப நிகழ்சிசிகளில் கலந்து கொள்ளாத நிலையினை இன்றளவும் நாட்டுப்புறங்களில் காண முடிகின்றது. கணவனை இழந்த பெண்ணிற்கு யாரும் பரிவு காட்டுவது இல்லை என்பதை “**கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்**”3 **என இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்**.

கணவனை இழந்த பெண்ணொருத்தி தான் பொட்டு, பூ, தாலி இழந்ததையும், இப்பெண் சிறுவயதில் தன்னுடைய கணவனை இழப்பாள் என்பதை தெரிந்தவர்கள் உறவினர்கள் யாரும் சொல்ல வில்லை என ஒப்பாரி மூலம் வெளிப்படுத்துகிறாள்.

**“பொட்டு இழந்தேன் பூ இழந்தேன்**
**அம்மா புன்னியரே தான் இழந்தேன்**
**மண்ணை இழந்தேன் மனை இழந்தேன்**
**பாவி நான் மன்னவனே தான் இழந்தேன்**
**நான் சிறுசுல அறுப்பேனு**
**இந்த கொலைக்கார சீமையில**
**தெரிஞ்சவைங்க சொல்லலையே**
**நான் வயசுல அறுப்பேனும்**
**சாமி வந்தவைங்க சொல்லலையே**
**நான் சிவப்பு நெருப்பு பெட்டி**
**சேலை வைக்கும் வேங்குபெட்டி**
**நான் சிறுசுல அறுப்பேனு**
**இந்த பாவியோட வாசலிலே**
**தெரிந்தவைங்க சொல்லலையே**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR

**நான் பச்ச நெருப்பு பெட்டி**
**பவுனு வைக்கும் வேங்கு பெட்டி**
**நான் பாதியில அறுப்பேனும்**
**இந்த தேசம் பாத்தவைங்க சொல்லலையே"4**

**கணவனின் பெருமைகள்**

கணவனை இழந்த பெண்கள் சுபநிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது அரிதாகவே காணப்படுகின்றது. நாட்டார் வாழ்வியலில் பூ பொட்டும் இழந்த பெண்கள் அமங்கலியாகக் கருதப்படுகிறாள். மாசி மாதம் மதுரையில் இருக்கும் கடையில் பட்டுச் சேலை எடுத்து கொடுத்த கணவனையும், பட்டுச் சேலையை உடுத்திச் செல்லும் போது பார்ப்பவர்கள் விலை என்ன என்று கேட்பார்கள் என்பதை நினைத்து கணவன் இறந்த நிலையில் துக்க நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் போது கணவனின் பெருமைகளை கூறுகிறாள்.

**"மாசி பணியும்**
**மதுரை கடை திறந்து**
**மதிச்ச தொரு பட்டெடுத்து**
**மயிலாலுக்குத் தந்திங்கனா**
**மயிலா மடிச்சி உடுத்திக்கிட்டு**
**மைந்தனையும் தந்தளிக்கும்**
**மன்ன வரை முன்னவச்சி**
**நீங்க இருக்கும்**
**மதுரைக்கு வந்தேனேனா**
**மதுரையில உள்ளவைங்க**
**பட்டு விலை என்னன்னா**
**பட்டு விலை எனக்கு தெரியாது**
**எனக்கு வந்த பாண்டியென கேளுன்னேன்?**"5

**மகனை இழந்த தாய்**

சமுதாய வாழ்க்கையில் பெரும்பாலும் பெண், ஆண் இனத்தை சார்ந்திருக்கிறாள். மகன் இல்லாத நிலையில் அப்பெண் நாதியற்றவள் என அழைக்கப்படுகின்றாள். பெரும்பாலும் பெண்கள் துக்க நிகழ்வுகளில் பங்கேற்கும் போது தன்னுடைய குடும்ப சூழ்நிலைகளை வெளிக்காட்டுகிறாள். தன்னுடைய மகனை நினைத்து கல்லால் கப்பல், வெள்ளியில் கப்பல் செய்து தன் மகனை கடைசி வரை காண முடிய வில்லை என்பதை

**"கல்லாலே கப்பல் செய்து நாபெத்த மகனே**
**உன்ன நா கடலிலே விட்டேனடா**
**நா கடலிலோ விட்டதப்போ நா பெத்த மகனே**
**உன்னை கடைசி வரை காணலடா**
**நா வெள்ளியாலே கப்பல் செய்து நா பெத்த மகனே**

**உன்னை வீதியிலே விட்டேனடா**
**இந்த வீதியிலே விட்டதப்போ நா பெத்த செல்ல மகனே**
**உன்ன இறுதி வரகாணலடா"6**

இப்பாடல் மூலம் வெளிக் கொணர்கிறாள்.

**மகனின் பெருமைகள்**

நாட்டார் வாழ்வியல் முறைகளில் தந்தை தாயின் இறப்பு நிகழ்வுகளில் மகன் கொள்ளி வைக்கும் நிகழ்வு சிறப்பிடம் பெறுகின்றது. தாய் ஒருத்தி தனக்கு மகன் இல்லை என்பதையும் மகன் பிறந்திருந்து கொள்ளி வைத்தால் பரமலோகம் போய் விடுவேன் என தன்னுடைய மகனின் பெருமைகளை எடுத்துரைக்கின்றாள். **"கருமம் செய்யவும் கொள்ளி வைக்கவும் வயிற்றில் பிறந்த மகனே உரிமையுள்ளவன், கருமம் செய்யப்பிள்ளை உடையவர்கள் ஒரு குறையும் இல்லாதவர்கள"7 என்று மக்களின் நம்பிக்கையை நா.வானமாமலை விளக்குகிறார்.**

**"பத்து நாள் கட்டை வெட்டி**
**பாதையில தீ மூட்டி**
**பகையாளி கொள்ளி வைத்தால்**
**பாதி குறைக் கிடைப்பேன்**
**பரமலோகம் போக மாட்டேன்**
**நான் பெத்த பாலகன்**
**கொள்ளி வைத்தல்**
**பரமலோகம் போயிடுவேன்**
**பாங்கி குறை ஆத்திடுவேன்"8**

**பெற்றோரை இழந்த மகள்**

குடும்ப உறவுகளில் தந்தையின் கடமை மிகையாகாது. கணவனை இழந்த மனைவியால் தன் பிள்ளைகளுக்கு வேண்டிய வளர்ச்சியினை சரிவர கொடுக்க முடியாது. குடும்பத்தை காக்கும் பணி தந்தையை சாரும். உப்பு இல்லாத சோரும் தந்தை இல்லாத குடும்பமும் குப்பை என்று அழைப்பதை இன்றவும் காணப்படுகின்றது. தந்தையை இழந்த பெண் தனக்கு கமலம் என்று பெயர் சூட்டியதையும், நெற்றியில் பொட்டு இட்ட பெருமைகளையும் சொல்லி அழுவதை

**"எனக்கு கன்னத்தில் பொட்டு வச்சு**
**ஏ என்ன பெத்த அப்பா**
**எனக்கு கமல முன்னு பேருவச்சு**
**என்ன காடு கண்ட பக்கம் எல்லாம்**
**என்ன கணிஞ் சலுவ பொன்ன வச்சு**
**நெத்தியில பொட்டு வச்சு**
**ஏ என்ன பெத்த அப்பா**
**எனக்கு நீலமுனு பெருவச்சு**
**நிழலு கண்ட பக்க மெல்லாம்**

**எனக்கு நின்னபே பொன்ன வச்சு"9**

இப்பாடல் மூலம் அறிய முடிகின்றது

தந்தையின் பெருமையினை சொல்லி அழுவது போல் தாய் இறந்த போது அவளின் பெருமைகளையும் சொல்லி அழுகின்றாள் மகள்

**"எனக்கு கொல்லி மலமேல**
**ஏ என்ன பெத்த என் அம்மா**
**எனக்கு கொட்டும் பால் கொட்டுதுனு**
**கோலாட்டம் ஆடுதுனு குருபூச ஆவுதுன்னு**
**நாகோயிலா மவுந்திருந்தேன் கொலையின் பரதேசி**
**கொல்லிமல தன்னாசி உங்களோட மாலில கொட்டுதப்பா**
**கொட்டுலமா கோலாட்டம் ஆகலமா குருபூச ஆவலமா**
**நீ பொறந்த கோட்டையில சேதம் அம்மா**
**இந்த கோராட்டார் வீதியில**
**நீ கோத்தையா உழைத்திட்டு குரல் விட்டு நானலுவ**
**கோராட்டார் உள்ள சனம் கோந்தே**
**கலையு தன்னா குரலுமங்கி போனு தம்மா**
**இனிமேல் எனக்கு கோந்தகலஞ்சா என்ன?**
**குரலுமங்கி போனா என்ன?**
**குணமுள்ள தாயாரே நா கூட்டத்துல காணுவரை"10**

**சகோதரர்களை இழந்த அக்கா**

நாட்டுப்புற வாழ்வியல் முறைகளில் நிகழும் சுப நிகழ்ச்சிகளில் தாய்மாமன் சீர்வரிசை மதிப்புடைய பொருளாக கருதப்படுகின்றது. தன்னுடைய தம்பிகள் கப்பலில் பயணம் செய்யும் போது வெள்ள நீரில் அடித்து செல்லப்படுகின்றனர். இதனை அறிந்த அக்கா தன்னுடைய தம்பிகளின் பெருமைகளை

**"நான் அண்ணாமலை கோயிலுக்கும்**
**அரியலூர் ஸ்டேசனுக்கும்**
**ஆறுபது டிக்கெட்டு**
**அவசரமாக வாங்கி வந்தேன்**
**தங்க மழை பெய்ததும்**
**திரண்ட வெள்ளம் வந்ததும்**
**தண்ட வள விகம்பி தானா கழன்றதும்**
**நான் மாலையிடும் தம்பிகளாம்**
**மண்ணில் மாண்டதும்**
**நான் காசு வைக்கும் வேங்குப் பெட்டி**
**பாதாளம் போனதும்**
**சீலை வைக்கும் வேங்குப் பெட்டி**

**சேத்துள்ள போனதும்**
**எனக்கு ஐயாவும் கொய்யாவும்**
**ஆத்தோட போனதும்**
**தங்க சவுக்கு மரம்**
**என்னைப் பெத்த தருமரோ வைத்த மரம்**
**ஜனங்கள் எல்லாம் தேக்கு மரம்**
**பொண்ணு சவுக்கு மரம்**
**என்னைப் பெத்த புண்ணியரோ வைத்த மரம்**
**பிணங்கள் எல்லாம் தேக்கு மரம்**
**அழுது புலம்பரது உங்க ஐவருக்கும் சம்மதம்மா**
**என்னோட வார்த்தைகளைக் கேட்பாரில்லை"11**
இப்பாடல் மூலம் வெளிப்படுத்துகிறாள்

**சகோதரர் இல்லாத நிலை**

பெண்கள் சமுதாயத்தில் தனித்து வாழ இயலாத நிலையினை காணமுடிகின்றது. பெண் திருமணம் செய்து புகுந்த வீட்டிற்கும் செல்லும் போது தன்னுடைய சகோதரர்களின் சீர்வரிசை பொருட்களை இவ்வுலகில் உள்ள பொருள்களை விட விலை மதிப்பற்றதாகக் கருதுகின்றாள். சகோதரர்கள் என்னுடன் பிறந்திருந்தால் நான் இறக்கும் போது எனக்கு பொறந்த வீட்டு கோடி வரும் என்பதை நினைத்து சகோதரர்கள் இல்லாத நிலையினை

**"சப்பாத்திபூபூக்கும்**
**சரம் சரமாக பிச்சி யெறங்கும்**
**சதிகார அண்ணனுடன்**
**சரியா பிறந்திருந்தா**
**சரடு பதிக்க வரும்**
**சந்தன கிண்ணி வரும்**
**தங்களுக்கு கோடி வரும்**
**கோட்டை சொந்தமாகும்**
**சதிகார அண்ணனுடன்**
**சரியா பொறக்கம்மா**
**சந்தன கிண்ணியுமில்ல**
**கோட்டை சொந்தமில்ல**
**கோயிலாலுக்கு கோடியும் இல்ல"12**

**தாயின் மனக்குமுறல்**

தாய் தன்னுடைய மகளை திருமணம் செய்து கொடுக்கின்றாள். திருமணம் முடிந்த நிலையில் கணவன் வீட்டில் நல்ல மண வாழ்க்கையும், மகிழ்ச்சி பொங்க

வாழ்வாள் என நினைக்கின்றாள். ஆனால் மகள் வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லை என்பதை அறிந்து கொண்ட தாய் தன் மகளின் இன்னல்களை எண்ணி

**"சீமை மணி பிரசு**
**செவத்திலோடும் கண்ணாடி**
**செழுக்கம்மா வாழ்வினு**
**செழுக்கம்மா வாழ்வினு**
**உன்னைப் பெத்த தாயராய்**
**சிந்தையில் எண்ணியிருந்தேன்**
**செமுக்கமா வாழுலம்மா**
**செவுத்தாலா இரண்டுக்கிளி**
**நான் வளர்த்த செல்லமே**
**சிந்தை கிட்டு நிற்கிறிங்க**
**மதுரை மணிபிரசு**
**மதுரை மணிபிரசு**
**மரத்திலோடும் கண்ணாடி**
**மவுச்சியா வாழ்வினு**
**மவுச்சியா வாழ்வினு**
**மன சில எண்ணியிருந்தேன்**
**மரத்தால ரெண்டுக்கிளி**
**நான் வளர்த்த செல்லமே**
**மதிப்புக் கெட்டு நிற்கிறிங்க**"13 எனப் பாடுகின்றாள்.

## மகப்பேறு இல்லாத நிலை

ஆண் பெண் இருவரும் திருமணம் செய்து கொண்டு இல் வாழ்க்கை வாழும்போது பெண்ணிற்கு குழந்தைபேறு இல்லையென்றால் கணவர் வீட்டிலும், சமுதாயத்திலும் ஒதுக்கப்படுவதை காணலாம். அப் பெண் வரடி,மலடி,குருடி எனப்பல பெயர்களில் அழைப்பதை காண முடிகின்றது. தனக்கு குழந்தை இல்லாத நிலையினை நினைத்து வட்டில் போட்ட சோற்றை வாரித் திண்ணபிள்ளை இல்லை என அமுது புலம்புகின்ற நிலையினை

**"நான் வட்டியில போட்ட சோத்த**
**வாரித் திண்ண பிள்ளையில்ல!**
**கிண்ணியில போட்ட சோத்த**
**கீறித் திண்ணப் பிள்ளையில்ல!**
**ஊருக்குப் போகயில**
**உடன் வரப் பிள்ளையில்ல**"14
எனும் பாடல் மூலம் அறியலாம்.

## முடிவுரை

நாட்டுப்புற மக்களால் ஒப்பாரி இறந்தவர்களின் மீது பல நிலைகளில் பாடப்படுகிறது. தாய், தந்தை, கணவர், பிள்ளைகள், உற்றார், உறவினர், இவர்களில் எவரேனும் ஒருவர் இறந்து விட்டால் அழுகின்ற பெண் தன்னுடைய மன நிலையினை ஒப்பாரிப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்துகிறாள். பெண் இறப்பு நிகழ்வில் கலந்து கொள்ளும் பொழுது பிறந்தவீடு, புகுந்த வீட்டின் இன்பத், துன்பங்கள், பெருமைகளை சொல்லி அழுகிறாள். ஒப்பாரி பாடல்கள் மனித சமூகத்தின் வாழ்வியல் நெறிகளையும், பண்பாடு, கலாச்சாரம் இவற்றை எவ்வாறு வெளிக்காட்டுகின்றன என்பதை இவ்வாய்வின் மூலம் அறியமுடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1 .இளம்பூரணார், தொல்காப்பியம் செய்யுளியல் நூற்பா 170, 2001, சைவ சித்தாந்த நூற்பத்திப்புக் கழகம், சென்னை -18.

2. வி.சரஸ்வதி நாட்டுப்புற பாடல்கள் சமூக ஒப்பாய்வு பக்.36,1982 மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21

3. ஞா.மாணிக்கவாசன், சிலப்பதிகாரம், வழக்குரை காதை,வரி. 80,மே.2002, உமா பதிப்பகம், சென்னை - 600001.

4. நேர்காணல் பெ. பெரியக்காள், நாள்: 15.07.2025

5. நேர்காணல் ம. சீரங்காயி, நாள்: 15.07.2025

6. நேர்காணல் கு. பூசம்மாள், நாள்: 15.07.2025

7. நா. வானமாமலை, தமிழர் நாட்டுப் புறப்பாடல்கள் பக்.167, 1991, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

8. நேர்காணல் க. சின்னம்மாள், நாள்: 17.07.2025

9. நேர்காணல் க. மயிலி, நாள்: 17.07.2025

10. நேர்காணல் வ. கோயிந்தம்மாள், நாள்: 17.08.2025

11. நேர்காணல் சி. சின்னம்மாள், நாள்: 17.08.2025

12. நேர்காணல் ப. மருதம்மாள், நாள்: 18.08.2025

13 .நேர்காணல் சு. பாப்பா, நாள்: 18.08.2025

14. நேர்காணல் கு. பாப்பாத்தி, நாள்: 18.08.2025

## துணை நூற்பட்டியல்

1 .இளம்பூரணார், தொல்காப்பியம் செய்யுளியல் நூற்பா 170, 2001, சைவ சித்தாந்த நூற்பத்திப்புக் கழகம், சென்னை -18.

2. வி.சரஸ்வதி நாட்டுப்புற பாடல்கள் சமூக ஒப்பாய்வு பக்.36,1982 மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21

3. ஞா.மாணிக்கவாசன், சிலப்பதிகாரம், வழக்குரை காதை,வரி. 80,மே.2002, உமா பதிப்பகம், சென்னை - 600001.

4. நா. வானமாமலை, தமிழர் நாட்டுப் புறப்பாடல்கள் பக்.167, 1991, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.